செய்தி வெளியீடு எண். 11-2018 நாள்: 07.01.2018

# விழுப்புரம் மாவட்டம் பொங்கல் 2018 விலையில்லா வேட்டி சேலை மற்றும் பொங்கல் பரிசு தொகுப்பினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்.

*****

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம் எலவனாசூர்கோட்டை ஊராட்சியில் வருவாய்த்துறை மற்றும் கூட்டுறவுத்துறையின் சார்பாக பொங்கல் 2018 விலையில்லா வேட்டி சேலை மற்றும் பொங்கல் பரிசு தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (07.01.2018) குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018ம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்க ரூ.210 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, விழுப்புரம் மாவட்டத்தில் 8,92,257 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினையும், 835130 குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா வேட்டி சேலையினையும் வழங்கும் நிகழ்ச்சியினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் நேற்றைய தினம் தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, இன்றைய (07.01.2018) தினம் உளுந்தூர்பேட்டை வட்டம் எலவனாசூர்கோட்டை ஊராட்சி கடை எண்.1ல், 645 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி சேலையினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, கள்ளக்குறிச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக, பொது நிதியின்கீழ் ரூ.165 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட பேரறிஞர் டாக்டர்.அண்ணா பேருந்து நிலையத்தை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் இன்று (07.01.2018) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார், திருக்கோவிலூர் சார் ஆட்சியர் திருமதி.சாருஸ்ரீ,இ.ஆ.ப., கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்.க.காமராஜ், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.குமரகுரு, கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.பிரபு, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.பாலகிருஷ்ணன், விழுப்புரம் துணை பதிவாளர் திரு.சண்முகம், துணை பதிவாளர் (பொ.வி.தி.) திரு.சிவசங்கர், உளுந்தூர்பேட்டை சார் பதிவாளர் திரு.ராஜசேகர், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.இராஜேந்திரன், கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மல்லிகா, நகராட்சி ஆணையர் திருமதி.லெட்சுமி, நகராட்சி பொறியாளர் திரு.அருண் மற்றும் வருவாய்த்துறை, கூட்டுறவுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.